(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)

4. கவன ஈர்ப்பு

கோயம்புத்தூர், அவினாசிலிங்கம் மகளிர் நிகர்நிலைப் பல்கலைக்கழக நிருவாக நெறிமுறைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. பி.எல். சுந்தரம், திரு. ந. நஞ்சப்பன், திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. அ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. வீ.பி. நாகைமாலி, திரு. ஆர். ராமமூர்த்தி, டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். (குறுக்கீடு)

(முற்பகல் 11-10)

3. தகவல் கோரல்–தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டில்லி பாபு, நீங்கள் தேவையில்லாததைப் பற்றியெல்லாம் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) நான் அதற்கெல்லாம் பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) அதற்கெல்லாம் நான் பதில் சொல்லிவிட்டேன். அந்த பதில் அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருடைய பதில்தான் இறுதியானது. (குறுக்கீடுகள்) அதையெல்லாம் மாற்றுவதற்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. (குறுக்கீடுகள்) அதைப் பேச முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இந்தக் கவன ஈர்ப்பிலே நீங்கள் பேசுங்கள்.